## முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு --- 1

### வணிகவியல்

CHAPTER 16 - 23

நேரம் : 1.15 மணி

மதிப்பெண் : 45

### பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. நுகர்வோர் இயக்கத்தின தந்தை யார்?
   அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப். கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

2. ஜான் F. கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில நுகர்வோர் உரிமைகளில் இடம் பெறாதவை எது?
   அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை
   இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

3. புதிய பொருளாதாரக் கொள்கை ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ------------------
   அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

4. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?
   அ) மாவட்ட நீதிபதி ஆ) உயர் நீதிமன்ற நீதிபதி
   இ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ) மேல குறிப்பிடப்பட்டவை எதுவும் இல்லை

5. VUCA ---------, ---------, --------- , ------------
   அ) மதிப்பு, நிச்சயமின்மை, சிக்கலானது, தெளிவில்லாதது
   ஆ) மதிப்பு, தவிர்க்க இயலாதது, நிறும மற்றும் அதிகாரம்
   இ) மாற்றம், கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது, நிறுமம், ஏலம்
   ஈ) மேற்கூறிய அனைத்தும்

6. சரக்கு விற்பனைச் சட்டத்தில் எது சரக்கு என்ற பொருளை உள்ளடக்கியது அல்ல?
   அ) சரக்கிருப்பு ஆ) வரவேண்டிய பங்காதாயம் இ) பயிர் ஈ) தண்ணீர் விற்பனை

7. மாற்றப் பெறுநர் யார்?
   அ) ஆவணத்தை மாற்றுபவர் ஆ) யார் பெயரில் மாற்றப்படுகிறதோ அவர்
   இ) பணம் பெறுபவர் ஈ) மேற்கூறிய எவரும் இல்லை

8. எழுதிய ஆவணம், கடனுறுதிச் சீட்டா அல்லது மாற்றுச் சீட்டா என்று அறிய முடியாத ஆவணம் -----------------------
   அ) ஆணை ஆவணம் ஆ) கொணர்பவர் ஆவணம்
   இ) தெளிவில்லா ஆவணம் ஈ) நேர ஆவணம்

9. கீழ் குறிப்பிடப்பட்டவைகளில் எது உற்பத்திக் காரணி?
   அ) நிலம் ஆ) உழைப்பு இ) தொழில்முனை ஈ) மேற்கூறிய அனைத்தும்

10. சரியான கூற்று எது?
    அ) தொழில் முனைவோர் ஒரு தடையற்ற சிந்தனை வாதி
    ஆ) தொழில் முனைவோர் தன்னிச்சையான நபர் அல்ல
    இ) தொழில் முனைவோர் உரிமையாளர் என்ற தகுநிலை படைத்தவர் அல்ல
    ஈ) தொழில் முனைவோர், தான் ஆரம்பித்த தொழிலின் இடரை ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை

## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. கலப்படத்திறகு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
12. வணிகத்தின் தலையாய நோக்கங்கள் யாவை?
13. காசோலை என்றால் என்ன?
14. வணிகசூழல் வரைவிலக்கணம் தருக.
15. தாராளமயமாக்கல் என்றால் என்ன?
16. ஒரு பொருளை ஒரு நபர் வைத்திருப்பதால் மட்டும் அவர் உரிமையாளர் ஆகிவிட முடியுமா? அதன் பெயர் யாது?

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4× 3 = 12

17. மாநில ஆணையம் என்ற பதத்தை விவரிக்கவும்.
18. அரசியல் சூழ்நிலை காரணிகள் யாவை?
19. புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகளை எழுதுக.
20. "வாங்குவோர் ஜாக்கிரதை" எனறால் என்ன?
21. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று நன்மையை எழுதுக
22. காசோலையில் நாம் இடும் கையொப்பத்தின் மீது வங்கியருக்கு சந்தேகம் ஏற்பட்டால், எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வங்கியர் அந்த சந்தேகத்திற்கு தீர்வு காண்பார்? காசோலைக்கு பணம் தர வங்கிக்கு சலுகை நாட்கள் தரப்பட்டுள்ளதா? காசோலையில் வருவாய்தலை ஒட்ட வேண்டியது அவசியமா?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க

( அல்லது )

தாராளமயமாக்கல் நன்மைகள் பற்றி விளக்குக.

24. விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக.

( அல்லது )

காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக.

25. நுகர்வோரின் கடமைகளை விளக்குக?

( அல்லது )

மாற்றுச்சீட்டு மற்றும் கடனுறுதிச் சீட்டு வேறுபடுத்துக.